2001 ஜனவரி 23]

அடையாளம் கண்டு சிறப்பிக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில், சில விரிவான திட்டங்களை ஏற்கெனவே செயல்படுத்தியிருக்கிறோம். 1998 ஆம் ஆண்டு கோலாலம்பூரைச் சேர்ந்த முரசு நெடுமாறன் என்பவருக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் பாரதிதாசன் விருது வழங்கப்பட்டது. அதுமட்டுமல்ல, 2000 ஆண்டிற்கான திரு.வி.க. விருது, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் அறிஞர், சிறந்த தமிழ் அறிஞர்-திறனாய்வாளராக இருக்கின்ற ஒரு பேரறிஞராக விளங்குகிற திரு. கா. சிவத்தம்பி அவர்களுக்கு வழங்கப்பட்டது. அண்மையில் குறள் பீட விருது வழங்கும் விழாவில் குறள் பீடப் பரிசு, கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த சேஷநாராயணன் என்பவருக்கு வழங்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல், ஏற்கெனவே பல்லாயிரக்கணக்கான பேர் விண்ணப்பித்தாலும் தகுதியுடையவர்கள் என்று பல பேர் கலைமாமணி விருது வழங்கப்பட்டுச் சிறப்பிக்கப்படுகிறார்கள். அந்தவகையில் வெளிநாடுகளைச் சார்ந்தவர்கள், வெளி மாநிலத்தில் வாழ்கின்ற கலைஞர்களையும் தேடிப்பிடித்து, மொத்தம் 19 பேர்களுக்கு கலைமாமணி விருது வழங்கப்பட்டிருக்கிறது. அதிலே புதுவையைச் சேர்ந்த 2 பேர், சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஒருவர், பரோடாவில் இருக்கிற ஒருவர், மும்பையைச் சேர்ந்த 4 பேர், புதுடெல்லியைச் சேர்ந்த 6 பேர், கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த 4 பேர், திருவனந்தபுரத்தில் இருக்கிற ஒருவர் என்று 19 பேர் சிறப்பு பெற்றிருக்கிறார்கள். எனவே, எல்லை விரிவடைந்து அதேநேரத்தில் எங்கெல்லாம் சிறந்த கலைஞர்கள், எங்கெல்லாம் தமிழ் அறிஞர்கள் இருக்கிறார்களோ அவர்களையெல்லாம் உட்படுத்தி, தமிழக அரசு சிறப்புச் செய்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள் - விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. வினா எண் 34, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.*

34—

சேவை நிறுவனங்களுக்கு உணவுப் பொருட்கள்

***6706—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2001 ஜனவரி 23

சமூக சேவை புரியும் சேவை நிறுவனங்களுக்கு நியாய விலைக் கடைகள் மூலம் குறைந்த விலையில் உணவுப் பொருட்களை விற்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சமூக சேவை புரியும் சேவை நிறுவனங்களுக்கு அவரவர்களின் கோரிக்கையின் அடிப்படையில் அத்தியாவசியப் பொருட்களான அரிசி, சர்க்கரை, கோதுமை போன்றவை பொது விநியோக அங்காடி விலைக்கு வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக சேவை நிறுவனங்கள் குறிப்பாக, வில்லிவாக்கம் தொகுதியிலே மாதா அமிர்தானந்த மயி பொதுச் சேவை நிறுவனம், என்.வி.என். நகர் ரெசிடெண்ட்ஸ் அசோசியேஷன், வளசரவாக்கம் ரெசிடெண்ட்ஸ் அசோசியேஷன், இராமாபுரம் குடியிருப்போர் நலச் சங்கம் போன்ற நல்ல அமைப்புகள் மக்களுக்கு நல்ல முறையிலே பணியாற்றி வருகின்றன. இதுபோன்ற பொதுச் சேவை நிறுவனங்கள் தனிப்பட்ட முறையிலே வீடு கட்டிக்கூடத் தருகின்றன. மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, 61 வீடுகள் கட்டி, அதிலே 5 வீடுகள் இஸ்லாமிய மக்களுக்கும், 4 வீடுகள் கிறிஸ்துவ மக்களுக்கும் கொடுத்து அனைத்துச் சமுதாய மக்களும் இருக்கின்ற வகையிலே நன்கு பணியாற்றி வருகின்ற மாதா அமிர்தானந்த மயி பொதுச் சேவை நிறுவனம் போன்ற நிறுவனங்களுக்கு இந்த அரசு நியாய விலைக் கடைகள் நடத்துகின்ற ஒரு வாய்ப்பு வழங்குமானால் இலாபநோக்கு இல்லாமல் மக்களுக்கு நல்ல முறையிலே அவர்கள் சேவை செய்வார்கள். இலாபநோக்கு இல்லாமல் சேவை செய்கின்ற இதுபோன்ற பொதுச் சேவை நிறுவனங்களுக்கு வழங்குவதன் மூலமாக அளவுக் குறைப்பு, எடைக் குறைப்பு இல்லாமல் சர்க்கரை வழங்குவதிலே சீரான முறையைக் கடைபிடிப்பது, அரிசி வழங்குவதிலே சீரான முறையைக் கடைபிடிப்பது, மண்ணெண்ணெய் வழங்குவதிலே சீரான முறையைக் கடைபிடிப்பது போன்றவற்றின் மூலமாக துறை நல்ல பெயர் எடுப்பதற்கு வழி ஏற்படும். இதனால் அரசுக்கும் நல்ல பெயர் ஏற்படும். ஆகவே, இந்த அரசு பொதுச் சேவை புரிகின்ற இதுபோன்ற நிறுவனங்களுக்கு நியாய விலைக் கடைகளை வழங்க முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

2001 ஜனவரி 23]

மாண்புமிகு திரு. கா.நா. நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுச் சேவை செய்கின்ற நிறுவனங்களுக்கு இந்த அரசு சார்பாக சலுகை விலையிலே பொருட்கள் வழங்கப்படுகின்றனவா என்று கேட்டு, அது வழங்கப்படுகின்றன என்று சொன்னவுடன், மேலும் அவர்களுக்கு நியாய விலைக் கடைகளை நடத்துவதற்கு அனுமதிக்கப்படுமா என்பதையும் இங்கே கேட்டிருக்கிறார்கள். குறிப்பாக, ஒவ்வொரு மாதமும் 2 இலட்சம் டன் அரிசி விநியோகத்திலே நமது சத்துணவுத் திட்டம், இன்னும் சொல்லப்போனால், ஆதிதிராவிட நலத் துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை நடத்துகின்ற மாணவர் விடுதிகள், அதுமட்டுமல்ல, பவானிசாகரிலுள்ள அரசு பயிற்சி மையம், உளுந்தூர்பேட்டையிலுள்ள அரசு மறுவாழ்வு இல்லங்கள், தமிழ்நாடு அரசு காவல் துறை பயிற்சி மையங்கள், காவல் துறை தற்காலிக முகாம்கள், புவியியல் ஆராய்ச்சிக் குழுக்கள், ஆண்கள் மற்றும் பெண்கள் சிறைச்சாலைகள், சார்நிலை சிறைச்சாலைகள், தொழு நோய் இல்லங்கள், அரசு மருத்துவமனைகள் ஆகியவற்றிற்கும் பொது விநியோக முறையில் நிர்ணயிக்கப்பட்ட அந்த விலையிலேயே அரிசி தரப்படுகின்றன. அதுமட்டுமல்ல, மத்திய ரிசர்வ் காவல் முகாம்கள், கண் மருத்துவ முகாம்கள் ஆகியவற்றிற்கும், அதுபோல இஸ்லாமிய பெருமக்கள் நடத்துகின்ற அமைப்புகளுக்கு ரம்ஜான் நோன்பு காலங்களிலும் பொது விநியோகத் துறையின் அந்த விலையிலேயே அரிசி ஒதுக்கப்படுகிறது. இந்த அரசு வந்த பிறகு, எவ்வளவு கூடுதலாக ஒதுக்கியிருக்கிறது என்ற கணக்கைச் சொல்ல விரும்புகிறேன். 1995-96 ஆம் ஆண்டு, 7,295 டன், கிட்டத்தட்ட 2 கோடியே 73 இலட்சத்து, 58 ஆயிரம் ரூபாய்க்கும், 1999-2000-ல் 22,514 டன், 8 கோடியே, 44 இலட்சத்து, 27 ஆயிரத்து 500 ரூபாய்க்கும் பொது வாழ்வு இல்லங்கள் மற்றும் இதுபோன்ற சமூக சேவை மையங்களுக்கும் தொடர்ந்து இந்த அரசு வழங்கி வருகிறது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல, சிறந்த நிறுவனங்கள் இருந்தால் அவர்கள் மனு செய்வார்களேயானால் அதையும் இந்த அரசு ஆராய்ந்து அவர்களுக்கும் வழங்கும். கடைசியாக அவர் சொல்கின்றபோது, நியாய விலைக் கடைகளை நடத்துவதற்கு அந்த நிறுவனங்களுக்கு அனுமதி தரப்படுமா என்று கேட்டார்கள். நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் சுய உதவிக் குழுக்களே இன்றைக்கு நியாய விலைக் கடைகளை நடத்த வேண்டுமென்று சொல்லி தமிழ்நாடு முழுவதும் 300 கடைகளை இப்போது சுய உதவிக் குழுக்களே ஏற்று நடத்துகின்ற சூழ்நிலையை உருவாக்கித்

தந்திருக்கிறார்கள். அதேபோல, நல்வாழ்வு இல்லங்கள், இருக்கின்ற சேவை நிறுவனங்கள் தொடர்ந்து நடத்துவதற்கு மனு செய்தால் அதையும் இந்த அரசு ஆராய்ந்து அவர்களுக்கும் நியாய விலைக் கடைகளை நடத்துவதற்குரிய உரிமை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 35, திரு. சி. வேலாயுதன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.*

35—

வயது வரம்பு தளர்த்துதல்

***38773—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் வருவாய்க் கிராமங்களைப் பிரிக்கும்போது ஏற்கெனவே கிராம நிர்வாகப் பயிற்சி பெற்ற குமரி மாவட்டத்தைச் சார்ந்தவர்களுக்கு, வயது வரம்பு தாண்டிய நிலையில் உள்ளவர்களுக்கு, வயது வரம்பினைத் தளர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டத்தில் கிராமங்களைப் பிரித்து, புதிய கிராமங்கள் தோற்றுவிக்கும் பணிகள், மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. எனவே, புதிய கிராமங்கள் தோற்றுவிக்கவோ அல்லது அதற்குத் தேவையான கிராம நிர்வாக அலுவலர் நியமனம் செய்யவோ தற்போது கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லாததால் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு வயது வரம்பினைத் தளர்த்துவது என்ற கேள்வி எழவில்லை.

முற்பகல் 10-35

திரு. சி. வேலாயுதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுக்க கிராமங்களைப் பிரிக்கும்போது, ஆட்கள் தேவைப்படுவார்கள் எனக் கருதி, கிராம நிர்வாகிகள் பயிற்சி